DINAMALAR

21 SEP 2021

PAGE 2

# தரவரிசை பட்டியலில் 8ம் இடம் புதுச்சேரி பல்கலைக்கழகம் அசத்தல்

**புதுச்சேரி, செப்.21–** உயர்கல்வி நிறுவன தரவரிசைப் பட்டியலில் , அகில இந்திய அளவில் 58வது இடத்தையும், மத்திய பல்கலைக்கழகங்களில் எட்டாவது இடத்திற்கு முன்னேறி புதுச்சேரி பல்கலைக்கழகம் சாதித்துள்ளது.

இது தொடர்பாக புதுச்சேரி பல்கலைக்கழக நிர்வாகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பு :

அண்மையில் மத்திய அரசின் கல்வித்துறையானது உயர்கல்வி நிறுவனங்களுக்கான தரவரிசைப் பட்டியலை வெளியிட்டது.

அதில், மத்தியப் பல்கலைக் கழகங்களுக்கான தரவரிசைப் பட்டியலில் 44.36 மதிப்பெண்கள் பெற்று, அகில இந்திய அளவில் 58வது இடத்தை புதுச்சேரி பல்கலைக்கழகம் பிடித்து சாதித்துள்ளது

ஒட்டு மொத்த பல்கலைக்கழகங்களுக்கான மதிப்பீட்டு தரவரிசைப் பட்டியலில் 43.10 மதிப்பெண் பெற்று 87வது இடம் பெற்றுள்ளது.

இந்தியாவில் இயங்கி வரும் 54 மத்திய பல்கலைக் கழகங்களில் புதுச்சேரி பல்கலைக்கழகம், 8வது இடத்தை பிடித்துள்ளது.

கொரோனா தொற்றுக் காலத்திலும் உயர் கல்வி மேம்பாடு மற்றும் ஆராய்ச்சிகளில் ஆக்கப்பூர்வமான பங்களிப்பு காரணமாக இச்சாதனையை நிகழ்த்தியுள்ளது,

தரவரிசைப் பட்டியலில் முன்னேறி சாதிப்பதற்கு காரணமான புலமுதன்மையர்கள், பேராசிரியர்கள், அதிகாரிகள், ஆய்வு மாணவர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத் சிங் நன்றியும்,பாராட்டும் தெரிவித்தார்.

இவ்வாறு செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

DINAKARAN

21 SEP 2021

PAGE 6

# பல்கலைக்கழக நுழைவுதேர்வு முடிவு வெளியீடு

புதுச்சேரி, செப். 21: புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் 2021-22ம் கல்வி ஆண்டிற்கான முதுநிலை பட்டப்படிப்பு, ஒருங்கிணைத்த முதுநிலை பட்டப்படிப்பு மற்றும் பல்வேறு ஆராய்ச்சி படிப்புகளின் மாணவர் சேர்க்கைக்கான நுழைவுத் தேர்வு கடந்த 2ம் தேதி தொடங்கி 4ம் தேதி வரை நடைபெற்றது. இந்தியா முழுவதும் உள்ள 40 நகரங்களில் 73 மையங்களில் 9 அமர்வுகளாக கணினி மூலம் 3 நாட்கள் நடந்தது. இதில் சுமார் 36,200 மாணவர்கள் கலந்துகொண்டு தேர்வு எழுதினர். இத்தேர்வு முடிவுகள் புதுச்சேரி பல்கலைக்கழக இணையதளத்தில் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.